In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti

Deposition of Witness

| | |
|---|---|
| CC: | 68/2016 |
| PW: | 1 |
| காவல் நிலையம்: | எட்டையபுரம் |
| தேதி: | 27-03-2026 நாள்: வெள்ளி |
| பெயர்: | மாரிமுத்து |
| த/பெ: | செல்லையா |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.03.2026**

(Accused present.)

**<u>சாட்சி நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு குறுக்கு விசாரணை</u>**

1) என்னுடன் உடன்பிறந்தவர்கள் 6 பேர் கற்பகவள்ளி முருகேஸ்வரி, சண்முகவேல், முருகேசன், ஆஜர் எதிரி மாரியப்பன் ஆவார்கள். இவ்வழக்கின் 2 வது எதிரி பேச்சியம்மாள் எனது தாயார் ஆவார். எனது தாயார் இவ்வழக்கு நிலுவையில் உள்ளபோதே இறந்துவிட்டார்.

2) நான் எனது தாயார் பேச்சியம்மாள் மற்றும் ஆஜர் எதிரி மாரியப்பனை அடித்து காயப்படுத்தியதாக எட்டையபுரம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டு சிசி எண். 66/2016 இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான்.

3) எனது வீட்டில் இருந்து எட்டையபுர காவல்நிலையமானது சுமார் 1 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டில் இருந்து அரசு மருத்துவமனை சுமார் 200 மீட்டர் தூரம் இருக்கும் என்றால் சரிதான்.

4) இந்த வழக்கு சம்பந்தமாக நான் நேரிடையாக எட்டையபுரம் காவல்நிலையம் சென்று புகார் அளித்தேனா என்றால் இல்லை. மருத்துவமனையில் வைத்து புகார் வாங்கினார்கள். எனது அப்பா உயிருடன் இருந்த போதே 2012 ம் ஆண்டு சொத்துக்களை பிரித்து கொண்டோம் என்றால் சரியாக பிரிக்கவில்லை.

5) எனது அப்பா 1 வது எதிரிக்கு கொடுத்த காலிமனையில் 1 வது எதிரி தான் கடை கட்டியுள்ளார் என்றால் சரிதான். அதில் 1 கடையை தருவதாக கூறிவிட்டு பிறகு தரவில்லை. மேற்படி 6 கடைகளும் 1 வது எதிரி அவரது சொந்த செலவில் கட்டியதால் எங்களுக்கு பிரித்து தரவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

6) எனது அப்பா அம்மா 1 ம் எதிரி மாரியப்பனுடன் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். 1 வது எதிரி அவரது கையில் இருந்த கம்பியால் தாக்கியதாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. நான் தான் 2 வது எதிரியான பேச்சியம்மாளை எங்கள் வீட்டின் சென்டிரிங் கம்பியால் தாக்கினேன் என்றால் சரியல்ல. அதை தடுக்க வந்த 1 வது எதிரியை நான் தான் தாக்கி காயப்படுத்தினேன் என்றால் சரியல்ல.

7) நான் எனது தாயாரை தாக்கி காயப்படுத்திய போது நான் தடுமாறி கீழே விழுந்ததால் எனக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொன்ன மாதிரி சொன்ன நாள் நேரத்தில் 1 வது எதிரி என்னை அசிங்கமாக பேசி தாக்கி கொலை மிரட்டல் விடுக்கவில்லை என்றால் சரியல்ல. எனது மீது வழக்கு பதிவு செய்யக்கூடாது என்பதற்காக எதிரி மீது பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது** )

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.